பெரியார் நினைவு சமத்துவபுரம் – 2009 – 2010ம் ஆண்டில் புதியதாக மேலும் 30 சமத்துவபுர குடியிருப்புகள் அமைத்தல் – விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் .

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி1) துறை**

**அரசு ஆணை (நிலை) எண். 59** **நாள்:14.7.2009.**

படிக்கப்பட்டவை:

1. அரசு ஆணை (நிலை) எண்.59, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 16.4.2008.
2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் நேர்முக கடித எண்.25797/09/ஜி1, நாள் 1.7.2009.

-------

**ஆணை:**

தமிழ்நாட்டில் சமூக நீதியை ஏற்படுத்தவும், சாதி சமயமற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்கவும், மக்கள் ஒற்றுமையுடனும் சகோதரத்துவத்துடனும் வாழ வேண்டும் எனும் தந்தை பெரியார் அவர்களின் செய்தியை பரப்பவும் மாநிலத்தில் 145 சமத்துவபுரங்கள் ஏற்கனவே அமைக்கப்பட்டன. 23.1.2008 அன்று சட்டமன்றத்தில் மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையில், ஏனையவற்றிற்கிடையே தந்தை பெரியார் அவர்களின் பெயரால் மேலும் 95 சமத்துவபுரங்கள் அமைப்பதால் அவரது சமுதாய, சமத்துவக் கொள்கை பரவுவதற்கு வழி ஏற்படும் என்று குறிப்பிடப்பட்டதற்கிணங்க படிக்கப்பட்டவை ஒன்றில் உள்ள அரசாணையில் 2008–09ஆம் ஆண்டில், மாநிலத்தில், மாவட்டத்திற்கு தலா ஒரு சமத்துவபுரம் (சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக) என்ற விகிதத்தில் மொத்தம் 29 சமத்துவபுரங்கள் அமைக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

2) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் படிக்கப்பட்டவை இரண்டில் உள்ள தனது நேர்முக கடிதத்தில் 21.1.2009 அன்று சட்டமன்றத்தில் ஆளுநர் ஆற்றிய உரையில், 2009–10ம் ஆண்டில் மாவட்டத்திற்கு தலா ஒரு சமத்துவபுரம் வீதம் (சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் தவிர) 30 சமத்துவபுரங்கள் (திருப்பூர் மாவட்டம் உட்பட) அமைக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், எனவே 2009–10 ஆம் ஆண்டில் மாவட்டத்திற்கு தலா ஒரு சமத்துவபுரம் வீதம் (திருப்பூர் மாவட்டம் உட்பட) (சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக) அமைக்கலாம் என்றும் தெரிவித்துள்ளார். சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்களில் போதுமான நிலம் இல்லாத காரணத்தினால் இந்த மாவட்டங்களில் சமத்துவபுரம் அமைக்கும் பணி எடுத்துக் கொள்ளத் தேவையில்லை எனவும் தெரிவித்து 2009–10ஆம் ஆண்டில் 30 சமத்துவபுரங்கள் அமைப்பதற்கு அனுமதி வேண்டியும், 2009–10ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கான வரைவு வழிகாட்டு நெறிமுறைகளை அரசுக்கு அனுப்பி அதற்கு ஒப்புதலளித்து ஆணை வெளியிடுமாறு கோரியுள்ளார். மேலும் 2009–10 ஆம் ஆண்டிற்கு சமத்துவபுரம் அமைப்பதற்கு ரூ. 75 கோடி வரவு – செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

3) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் செயற்குறிப்புகளை அரசு கவனமாகப் பரிசீலித்து, ஏற்றுக் கொள்ள முடிவு செய்துள்ளது. அதன்படி 2009–2010ம் ஆண்டில் மாநிலத்தில் மாவட்டத்திற்கு ஒரு சமத்துவபுரம் வீதம் (சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் தவிர) 30 சமத்துவபுரங்களை (திருப்பூர் மாவட்டம் உட்பட) அமைக்க ஆணையிடுகிறது. 2009–10–ஆம்

**13. தந்தை பெரியார் சிலை நிறுவுதல்**

- மேற்கண்ட அடிப்படை வசதிகளுடன், ஒவ்வொரு சமத்துவபுரத்திலும் தந்தை பெரியார் அவர்களின் வெண்கல சிலையை நிறுவ வேண்டும். கூடுமானவரை சமத்துவபுர நுழைவு வாயிலில் சிலை நிறுவப்பட வேண்டும். திட்ட அலுவலர் , மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, சிலை உருவாக்குதல் மற்றும் நிறுவுதல் பணிக்கான ஒப்பந்தப்புள்ளியை கோருவார்.

**14. திட்ட செயல்பாடு**

- இந்தத் திட்டத்தை வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) செயல்படுத்துவார். திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கீழ்க்கண்டவாறு பணிகளைத் தொகுத்து ஒப்பந்தப் புள்ளியைக் கோருவார்.

1) தொகுப்பு I – 100 வீடுகள்.
2) தொகுப்பு II - சமத்துவபுரத்திற்கான சாலைகள், நுழைவாயில் வளைவு மற்றும் பொது விநியோகக் கடை.
3) தொகுப்பு III – குடிநீர் வசதிப் பணிகள்.

தெரு விளக்குகள் அமைக்கும் பணி தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் ஒப்படைக்கப்படும். திருப்திகரமாக பணிகள் முடிவுற்ற பிறகு சம்மந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலரால் (வட்டார ஊராட்சி) பணிகளுக்கான பட்டியல் தொகை வழங்கப்படும்.

15 ஊரக வளர்சசி மற்றும் ஊராட்சி ஆணையருடன் கலந்தாலோசித்து அவ்வப்போது ஏற்படும் சூழ்நிலைகளின் அடிப்படையில் இத்திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் தேவையான மாறுதல்களை செய்ய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மை செயலாளருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

**க. அஷோக் வர்தன் ஷெட்டி,**
அரசு முதன்மைச் செயலாளர்.